# உலக அரங்கிலே
# உன்னத
# நிகழ்ச்சிகள்!

பூவை எஸ். ஆறுமுகம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# சிரங்கு வந்தது!

ஓர் ஆசிரியருக்கு விலாவில் பெரிய சிரங்கு புறப் பட்டது. ஒரு டாக்டரிடம் ஓடினார்.

டாக்டர் "சூடாகப் பற்றுப் போடுங்கள். ஆறி விடும்!" என்று சொல்லி பற்றுப் போடுவதற்கான விவரத்தைச் சொன்னார்.

வீட்டிலே ஆசிரியரின் சமையல்காரி இதைக் கேட்டு, "பூ! சூடான பற்றும் வேண்டாம், ஒரு மண்ணும் வேண்டாம். குளிர்ச்சியான பற்றுப் போடுவது தான் நல்லது!" என்றாள்.

ஆசிரியர் வேறு வழியில்லாமல், சமையற்காரி யின் இஷ்டப்படியே, குளிர்ச்சியான பற்றையே போட்டுக் கொண்டார்.

என்ன ஆச்சரியம்! இரண்டே வேளையில் சிரங்கு அமுங்கிப்போய் விட்டது!

ஆசிரியர் மீண்டும் டாக்டரிடம் போய், "சிரங்கு முற்றும் குணமாகி விட்டது, ஆனால், நீங்கள் சொன்னபடி நான் சூடான பற்றுப்போட்டுக்கொள்ள வில்லை. என் சமையல்காரி குளிர்ச்சியான பற்றுப் போடும்படி சொன்னாள். அதுதான் சிரங்கைக் குணப் படுத்தியது!" என்றார்.

டாக்டர் பிரமித்தார்: "இதென்ன வேடிக்கை யாக இருக்கிறதே! சூடான பற்றுப் போடும்படி யோசனை சொல்லும்படி அல்லவா என்னிடம் என் சமையற்காரி சொன்னாள்!"...... என்றார்!

## உயிர் மரம்!

நேருஜியின் சொந்த ஊரான அலஹாபாத்தில் ஒரு பெரிய வேப்ப மரம் இருக்கிறது.

1857ல் நடந்த சுதந்திரப் போராட்டத்தில் பலர் தூக்கிலிடப் பட்டனர்.

1956ல் அலஹாபாத் முனிஸிபல் நிர்வாகிகள் இதை ஏலத்துக்கு விட்டனர். ஆனால் ஏலம் எடுத்தவரை, மரத்தை வெட்ட விடாமல் தடுத்து விட்டனர் பொது மக்கள்.

இம் மரம் இன்னும் உயிருடன் இருக்கிறது!

## தொங்கு விளக்கு

அமரக் காதலர்களான அரகதம் பகுதியின் பிரசித்தி பெற்ற கல்லறைகளின் ரோஜாவாக விளங்கிக் கொண்டிருக்கும் அழகுத் தாஜ்மஹாலுக்கு உள்ளே, கல்லறைகளுக்கு மேலே, சிறியதொரு வெண்கலத் தொங்கு விளக்கு காட்சியளிக்கிறது.

இவ்விளக்கு 1906ல் இந்தியாவின் வைஸ்ராயான கர்ஸான் பிரபுவால் மும்தாஜ் மஹாலின் சமாதிக்கு அன்பளிப்புச் செய்யப் பட்டது!

மும்தாஜ்மஹால்-ஷாஜஹான் தம்பதிக்கு இவ் விளக்கும் ஓர் அழியாத நினைவுச் சின்னமாக அமைந்தது போலும்!

## மதுவால் நல்லவன்!

செங்கிஸ்கான் கொடியவன்; கொள்ளைக்காரன். பெரிய குடியனும் கூட.

மன்னனைத் திருத்த அவனது மந்திரி எவ்வளவு முயன்றும், முடியவில்லை. ஒருசமயம், மன்னனின் மது பானக் கோப்பையைப் பார்த்தார். உடனே அதை அரசனிடம் எடுத்துப் போனார். "மதுபட்டுப் பட்டு இரும்புப் பாண்டத்துக்கே இக்கதி வருமானால், தங்கள் உடம்பு என்ன ஆவது?" என்றாராம்.

செங்கிஸ்கான் அப்புறம் மதுவை நினைக்கவே யில்லையாமே!

## ஜெமினி

விண்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்கா சமீபத்தில் நிகழ்த்திய சாதனை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தப் படத்தில் இருக்கும் திரு பிராங்க் பார்மனும், திரு ஜேம்ஸ்லோவலும் ஜெமினி 7' என்ற அந்த விண்வெளிக் கப்பலில் பிரயாணம் செய்த வீரர்கள். இவர்கள் பதினாலு தினங்கள் விண்வெளியில் தங்கி 65-லட்சம் மைல்கள் பிரயாணம் செய்தார்கள். 206 தடவை பூமியைச் சுற்றி வந்தார்கள்.

இவர்களை 'ஜெமினி 6' என்ற விண்வெளிக் கப்பலில் சென்ற இரு வீரர்கள், நடுவானில் சந்தித்த சாதனையும் பிரமிக்கத் தக்கது!

# தாய்நாட்டுப் பாசமோ !

பாரிஸிலிருந்து ருஷ்யவீரர் யூரி ககாரினுக்கு வாரம் இருமுறை சிறுடப்பா பார்சல் வந்து கொண்டிருக்கிறது. அந்த டப்பாவில் ஆட்டுக்குட்டியின் புதிய இறைச்சி - இதயப்பகுதி சுத்தமாக வைத்து அனுப்பப் படுகிறது.

ககாரினின் சிற்றுண்டிக்குத்தான் இந்த இறைச்சியா ? — அல்ல ! அவர் வளர்க்கும் 'விலார்க்வியர்' எனும் ஈரானியப் பூனைக்குத்தானும் இது. ககாரினின் வெற்றிக்காக பாரிஸில் பூனை வளர்ப்புச் சங்கத்தாரினுல் அளிக்கப் பட்ட பரிசு இப்பூனை. ஆனுல் இதுவோ ருஷ்யா வந்ததும், ருஷ்யஉணவு எதையும் தொடமறுத்ததாம். உடனே மிகவும் சலுகை பெற்று பாரிஸ் இறைச்சிக்கு வழிவகை செய்தாராம். இப்போது அது மிகவும் சுறு சுறுப்பாகத் தன்நாட்டு மாமிசத்தைச் சுவைத்து வருகின்றதாம் !

"இறுதி வெற்றி நமக்கே," என்று பறைசாற்றி 'V' எனும் ஆங்கிலஎழுத்தை தமது இருவிரல்களாம் காட்டி, இறுதியில் இரண்டாம் உலகப் போரில் வெற்றி பெற்ற சரித்திரவீரர் சர் வின்ஸ்டன் சர்ச்சில்.

முப்பதுக்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியர் இவர் தமது தேசத்தின் கௌரவ பிரஜையாக 1963 ல் தேர்ந் தெடுத்தது. வெளிநாட்டார் ஒருவரை அமெரிக்கா கௌரவப் பிரஜையாக ஏற்றது அதுவே முதல் தடவையாகும் !

# கழுதைச் சவாரி

இங்கிலாந்தில் மாலை நேரங்களிலே கடற்கரைக் குப்பொழுது போக்கவரும் குழந்தைகட்கு கழுதைச் சவாரி செய்வது சிறந்த பொழுது போக்காம்.

உலகிலேயே லேஸ் தயாரித்து அதிகமாக வியாபாரம் செய்வது பிரிட்டானி நகரில்தானும். கிரீஸின் தலைநகரான ஏதன்ஸில் கடல்பஞ்சு வியாபாரம் பலூன் விற்பதுமாதிரி தெருக்களிலெல்லாம் விற்கப் படுமாம்! பீஹாரில் 30 லட்சத்துக்கும் அதிகமாக வுள்ள 'சந்தல்' எனும் ஆதிக் குடிகளின் மொழியில் 'பாப்லா' என்றால் திருமணம் என்று பொருள். இவர்கள் மணமுறை 'கிரின்' ப்ஹூ பாப்லா, துங்கி திபில் பாப்லா, சங்கா பாப்லா, கார்தி ஜாவே பாப்லா, கிரின் ஜாவே பாப்லா; இட்டுட் பாப்லா, நிர்பெல்க் பாப்லா' என்று ஏழு வகைப்படும்!

# இப்படியும் உண்டு

அமெரிக்க நாட்டின் செய்தி நிறுவனங்களைப் பற்றிய சிலபுள்ளி விவரங்கள் :

11,000க்கு மேற்பட்ட செய்தித்தாள்கள் பிரசுரமாகின்றன. இவற்றில், 1,855 தினத்தாள்கள். 57 மில்லியன் பிரதிகள். 9,000 க்கு மேல் வாரப் பதிப்புக்கள் பெரிய நகரங்களென்றால், தினம்ஆறேழு பதிப்புகள். மூன்றிலொரு பங்கு நாளிதழ்களில் ஞாயிறு விசேஷப் பதிப்பு உண்டு. 95% பேர்கள் தினசரித் தாள்கள் வாசிப்பவர்களே.

## சாபம்!

அமெரிக்கப் போர்விமானம் ஒன்று ஸ்பெயினில் நொறுங்கிவிழ, அதன் விளைவாக, நான்கு அணு குண்டுகள் விழுந்து சிதறின.

அவற்றைத் தேடி 4000 அமெரிக்க இராணுவ வீரர்கள் ஸ்பெயின் நாட்டுக் காடுகளிலும் புதர்களிலும் தேடுகின்றனர்.

எந்த நேரத்தில், மிச்சமிருக்கும் இரண்டு அணு குண்டுகள் வெடிக்குமோ என்று பீதியில் ஆழ்ந்திருக்கின்றனராம் ஸ்பெயின் மக்கள். "அமெரிக்காவும் அணுகுண்டுகளும் ஒழிக!" என்று கோஷங்களையும் செய்கின்றனராம்!

நாளதுவரை அவ்விரண்டு அணுகுண்டுகளும் கிடைக்க வில்லையாம்!

## அதிசயக் காடு

குழந்தைகள் விளையாடுவதற்கு உகந்த அழகுடன் 'தண்ணீர்க் காடு' என்று மேற்கு ஜெர்மனியிலுள்ள டஸ்ஸல் டார்பில் அமைக்கப் பட்டுள்ளது. ஒரு விசாலமான மண்டபத்தில் உள்ளீடற்ற 13 பிளாஸ்டிக் உருளைகள் தூண்களைப் போல் நிறுத்தப் பட்டுள்ளன. தூண்களுக்குள் பொருத்தப் பட்டுள்ள மின் விளக்குகள் எரியும்போது, ஒளி வெள்ளம் சூரிய கிரணங்களுடன் கலந்து அம் மண்டபத்தை ஒளிக் கடலாக்குகிறது. அந்த அழகிய ஒளி வெள்ளத்தின் சூழலிலே குழந்தைகள் ஆனந்தமாக விளையாடி மகிழ்கின்றனர்!

# கல்யாணத்துக்கு போனஸ்!

ஜப்பான் நாட்டில் தொழில் வளர்ச்சி உச்ச நிலையை அடைந்திருப்பதால், தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காகக் கல்யாண போனஸ் கொடுக்கிறார்கள். ஒரு பெண்ணை ஒப்ப வைத்து விட்டு, இவ் விஷயத்தை முதலாளியிடம் சொன்னால் போதும், உடனே போனஸ் கிடைக்கும்.

இசைக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் இந்தப் போனஸ் கொடுக்கப்படுகிறது. 500 பென் — அதாவது ரூபாய் 7— போனஸ் தொகை!

# ஒரு ப்ரிஸ்க்ரிப்ஷன்!

டாக்டர் லூதர் கோல்ட் என்பவர் குழந்தை வைத்தியத்தில் பெயர் பெற்றவர். மேலைநாடுகளில் வெகு பிரசித்தமானவர். சதை போடாமல், மெலிந்து நொஞ்சான்களாகவே காட்சியளிக்கும் சிசுக்களுக்கு ஒரு சரியான மருந்து வைத்திருந்தார் அவர்.

வைத்தியசாலையைச் சுற்றிப் பார்ப்பார். நோஞ்சலான பரிதாபத்துக்குகந்த குழந்தைகளை அவர் பார்க்க நேர்ந்தால், உடனே அந்தந்தப் பகுதி நர்சுகளுக்கு அவர் கீழ்க் காணும் வைத்தியக் குறிப்பை எழுதி வைப்பது வழக்கம்.

"மூன்று மணிக்கொரு தடவை குழந்தைக்கு முத்தம் கொடுக்கவும்!" இதுதான் வைத்தியம்!

## மும்முறை மணம் !

ஓர் அமெரிக்கரும், ஈரான்நாட்டைச் சேர்ந்த ஓர் இளவரசியும் லண்டனில் கல்யாணம் செய்து கொண்டனர்.

அவர்கள் ஒரேநாளில் மூன்றுதரம் கல்யாணம் கட்டிக் கொண்டார்கள்.

ஈரானில் சந்திப்பு நிகழ்ந்தது.

காதல் பிறந்தது.

ரிஜிஸ்தரார் அலுவலகத்தில் பதிவுத் திருமணம் நடந்தது.

பிறகு, மணமகள் மதப்படி, உடை மாற்றிக் கொண்டு பள்ளிவாசலில் திருமணம்.

அப்பால், மணமகன் மதப் பிரகாரம் மாதா கோவிலில் கல்யாணம் நிகழ்ந்தது.

மணமகன் டேவிட் பெல்ஹாம் ஒரு படத் தயாரிப்பாளர்.

மணமகளின் பெயர் : பருச்சி பக்டியாலே !

## தாயின் முத்தம்

திருமதி ராஜன் பென்படேலின் கணவர் தென் ஆப்பிரிக்காவில் ஜோஹன்ஸ் பர்க் நகரத்தில் சிற்றுண்டிச்சாலை நடத்துகிறர்.

திருமதி படேல் தன் பிறந்த ஊரான பம்பாய்க்கு வந்தார். ராகேஷ் என்ற குழந்தையை ஈன்றுள். ஊருக்குப் புறப்பட்டார்.

"ராகேஷ் தென் ஆப்ரிக்காவில் நுழையக் கூடாது!" என்று நிறவெறிச் சர்க்கார் தடையுத்தரவு பிறப்பித்தது.

"இந்தியர்கள் தான் பெருத பிள்ளைகளை இங்கே கடத்தி வருகிருர்கள்!" என்று 'சாக்குப் போக்கு' காட்டியது அரசாங்கம்.

திருமதி படேல் குழந்தையை விட்டு விட்டு தனித்துப் புறப்பட்டார். தென் ஆப்பிரிக்க சர்க்கார் பேரில் வழக்குப் போட்டு வென்றுள்.

விமானத்தில் பறந்து வந்த ராகேஷை நைரேர்பியில் வரவேற்று முத்தமிட்டாள் தாய்.

## ஒரு திருத்தம்

ஸச்சா கேட்ரி என்னும் பிரபலமான நடிகரை ஓர் ஆங்கில வாலிப நாடகாசிரியர் வந்து பார்த்தார். தாம்முன் கூட்டியே அனுப்பி வைத்திருந்த நாடகத்தின் தன்மைபற்றிக் கேட்டறிந்து போகவே வந்தார் அவர்.

"உங்கள் நடை சற்று செயற்கையாக இருக்கிறது. புரிவது கடினமாக இருந்தது. ஒரு விஷயத்தை உங்கள் உள் மனத்தில் இருத்திக் கொள்ளுங்கள்.

நாடக உரையாடல்கள் ஒரு மூடனுக்குக்கூட புரியும் படி அவ்வளவு சுலபமாக இருக்க வேண்டும்,'' என்ருர் நடிகர்.

நாடகாசிரியர், "ரொம்ப நன்றி. உங்களுக்கு எந்த இடம் என் நாடகத்தில் புரியவில்லையென்று சொல்லுவீர்களா? திருத்தி விடுகிறேன்!'' என்ருர், வெகு அமைதியாக.

## சாயாவுக்கு நன்றி!

சுமார் நாலாயிரத்து ஐநூறு ஆண்டுகட்கு முன்பு :

சீன தேசத்தில் ஷீ—லிங்-ஷீ என்னும் ஓர் அரசி ஆண்டாள். ஒருமுறை அவள் தேநீர் பருகியசமயம், உயரத்தே முசுக்கட்டை மரத்திலிருந்து ஏதோ ஒன்று தேநீர்க் கிண்ணத்தில் விழுந்ததாம். ராணி பதட்டத்துடன் கோப்பையை உற்றுப் பார்த்தாளாம். அழகிய மெல்லிய இழைகள் தெரிந்தனவாம். அவ்விழைகள் பள பளத்தன. உடனே நூல் நெசவில் தேர்ந்தவர்களை அழைத்தாளாம். அரசியே தறியில் குந்தி நெய்யத் தொடங்கிஞளாம்.

உலகத்திலேயே முதல் பட்டாடை இந்தச் சீன அரசியினுடையதே தாஞம்!

அந்தச் சாயாவுக்கு அவ்வரசியின் நன்றி தினமும் தெரிவிக்கப் பட்டு வந்ததாம்!

## சிற்பியின் உயிர்.

உலகப் புகழ்பெற்ற சிற்பி கார்ஃபூசியர் 1887ல் ஸ்விட்ஸர்லாந்தில் பிறந்தார். மார்ஸெய்ல்ஸில் பல மாடிகள் கொண்ட ஒரு மாபெரும் கட்டடத்தை அமைத்தார் அந்தச் சாதனை மூலம்தான் அவர் உலகப் புகழ் அடைந்தார்.

பாரிஸிலுள்ள 'யூனெஸ்கோ' கட்டடம் அவருடைய புகழுக்கு மற்றொரு சின்னம்.

ஐரோப்பா, ஆப்ரிக்கா, ஆசியா. அமெரிக்கா ஆகிய நாடுகளின் நகர நிர்மாணத்தின் ஆலோசகராக இருந்தவர் அவர். மாஸ்கோவை நல்ல நகரமாகச் செய்ய அவரை 1931 ல் ருஷ்ய அரசாங்கம் அழைத்தது. கார்பூசியார் கடற்கரையிலிருந்து சுமார் ஐம்பது கெஜத் தொலைவில் அவர் கடலில் நீந்திக் கொண்டிருக்கையில், மாரடைப்பு ஏற்பட்டு அவர் மரண மடைந்தார்.

1965, ஆகஸ்ட் இறுதியில் அவர் அமரத்துவம் அடைந்தார் !

## பாங்குப் பிரச்னை !

ஆஸ்திரேலியாவின் வடக்கு எல்லைப்பிராந்திய போலீஸ் காவல் நிலையமொன்றில் நியமிக்கப் பட்டுள்ள பூர்வகுடி மோப்ப மனிதர்களில் ஒருவன் தான் பில்லி. நாம் அதிசயத்தில் மலைக்கும் இத்தகைய அபூர்வச் செயல்கள் அவர்களுடைய அன்றாட அலுவல்களாகும்.

1867 நவம்பர். மெக்கன் ஸீ ஆற்ரோரம் இரண்டு போலீஸ்காரர்களின் சவங்கள் கிடந்தன. சுரங்கத் தொழிலாளர்களின் சம்பளப் பணமான 10,000 டாலரைப் பாங்கியிலிருந்து வாங்கிக் கொண்டு வரும்வழியில் யாரோ அவர்களைச் சுட்டுத் தள்ளி விட்டு, பணத்தைக் களவாடிச் சென்று விட்டனர்.

கிரிஃபின் என்ற இன்ஸ்பெக்டரின் தலைமையில் போலீஸ் கோஷ்டி யொன்று கொலையாளிகளைப் பிடிக்கச் சென்றது. அதில் 19 வயது நிரம்பிய 'மோப்ப மனிதன்' ஒருவன் இருந்தான். அவன் அந்த இரு போலீஸ்காரர்களின் அருகில் காணப்பட்ட காலடிகளைக் கூர்மையாகச் சில விநாடிகள் பார்த்தான். அடுத்தகணம் அவன் இன்ஸ்பெக்டர் கிரிஃபின் பூட்சுகளைப் பார்த்துக் கூச்சலிட்டான்: "நீர்தான் கொலைகாரன்!"

போலீஸ் கோஷ்டியே கிடு கிடுத்து அவன்மேல் பாயத்தயாரானது. ஆனால்கிரிஃபின் தன் குற்றத்தை ஒத்துக் கொண்டார். சூதாட்டத்தின் பிடியில் இறுகி, கடனில் மூழ்கிப் போயிருந்த அவர் பணத்துக்காக ஆசைப்பட்டு இந்த இரட்டைக் கொலையைப் புரிந்தார்! நீதிமன்றத்தில் அவருக்குத் தூக்கு தண்டனை கிடைத்தது. இதைத் தொடர்ந்து இந்த மோப்ப மனிதர்கள் ஸ்தாபனமும் நிலைத்து விட்டது.

# கல்வியில் சிறந்த தமிழ்நாடு

இந்தியாவிலேயே "கல்வியிற் சிறந்தது தமிழ் நாடு" என்ற பாராட்டை நாம் விரைவில் பெற்று விடுவோம். தமிழ் நாட்டில் பள்ளிக்கூடங்கள் இல்லாத ஊரே இல்லை. படிக்காதவர் இல்லை என்ற பெருமையும் சீக்கிரமே நமக்குக் கிடைக்காமலா போகும்? சென்னையில் இருந்து சில மைல் தொலைவில் உள்ள கீரநல்லூர் கிராமத்தின் ஜனத்தொகை 587. ஆனால் அங்கேயும் ஓர் உயர்நிலைப்பள்ளி இருக்கிறது!

வீடு வீடாகப் போய்ப் பணம் வசூலித்து உயர்நிலைப்பள்ளி கட்டி இருக்கிறார்கள் இவர்கள்! தங்கள் பகுதியில் உள்ள பள்ளிகளின் தேவையைத் தாங்களாகவே முன்வந்து பூர்த்தி செய்வதில் தமிழர்கள் காட்டியுள்ள அக்கறை, பிரமிக்கத் தக்கது. 37 ஆயிரம் பள்ளிகளுக்கு இவ்வாறு தானாக வந்து குவிந்த உதவிகளைக் கணக்கிலிட்டால், பத்து கோடி ரூபாய் ஆகிறது!

# நல்லவேளை!

நேப்பிள்ஸ், 1965 ஆகஸ்ட் 18— வின்சென்ஸோ என்ற 15 வயது இளைஞனது ஈமக்கிரியைகள் நடைபெற இருக்கும் சமயத்தில் அந்த இளைஞனே வீடுவந்து சேர்ந்தான்! பெற்றோர்கள் இவனைக்கண்டதும் பிரமித்துப்போயினர். ஆனால் மகிழ்ச்

சிக் கடலில் ஆழ்ந்தனர். இவனை உடனடியாக போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று இரு நாளைக்கு முன்பு பிரேதக்கிடங்கு ஒன்றில் வின் சென்ஸோ என்று தவறுதலாக, சடலம் ஒன்றை அடையாளம் கண்டு பிடித்ததாகத் தெரிவித்தனர்.

பழக்கடைகள் உள்ள மார்க்கெட்டுக்குஅலுவல் நிமித்தம் வின்சென்ஸோ சென்றிருந்தான். அந்த இடத்தில் இளைஞன் ஒருவன் லாரி ஏறிநசுக்கப் பட்டான். அந்தச் சடலம்தான் வின்சென்ஸோ என்று அடையாளம் கண்டுகொள்ளப் பட்டதே இத்தவறு நிகழக் காரணம்.

## எங்கே குரல்?

இங்கிலாந்தில் ஒரு பிரசவ விடுதி. பிள்ளைப் பேற்றுக்காகத் தாய் ஒருத்தி சேர்க்கப் பட்டிருந்தாள்.

திடீரென்று 'குவா... குவா' என்ற ஒலி வெளித் தாழ்வாரம் வரை எதிரொலித்தது.

சத்தம் வந்தபோது, அந்தத் தாய்க்குக் குழந்தையே பிறக்க வில்லையாம்!

பல நிமிஷங்கள் சென்றுதான் குழந்தை பிறந்தது.

வயிற்றிலிருக்கும் போதே குரல் கொடுத்த முதல் குழந்தை உலகத்திலேயே இதுதானும்!

அதிசயம்தான்!

# பாவம் நிருபர் !

அந்தக்கிழவர் பெர்னுஸ்மின் நூருவது பிராயத்தைக் கடந்து விட்டார். பிறந்த தினவிழாவையும் சிறப்புடன் கொண்டாடினூர். அப்போது அவரைப் படம் எடுக்க வந்தார் நிருபர் ஒருவர். படம் பிடித்தார், விடைபெறும் போது, “உங்களது நூருவதாண்டு விழாவில் உங்களைப் படம் பிடிக்க மீண்டும் வரலாமென்று நம்புகிறேன் !” என்ருர்.

அதற்குக் கிழவர் ‘கட கட’வென்று சிரித்தார் “தாராளமாக வரலாம், வாலிபரே! எனக்குச்சந்தேகமில்லை !... நீங்கள் தான் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறீர்களே ? பின் ஏன் சந்தேகம் உமக்கு ?’ என்று மடக்கினூர்.

பாவம், நிருபரின் முகம் தொங்கி விட்டது !

# ஆதிவாசி

நேபா எல்லைப்பகுதியில் சுபான்ஸிம் பிரிவில் ஹெலிகாப்டர் விமானம் ஒன்று வந்து இறங்கியது. அதிலிருந்து உயர்ராணுவ அதிகாரிகளும் பெண் ஒருத்தியும் இறங்கினூர்கள்.

அவர்களை வரவேற்க, ‘ஆபாதானி’ எனும் பழங்குடி மரபைச் சார்ந்த ஆதிவாசிகள் குழுமினர். ஓர் ஆதிவாசி அண்டிச் சென்று, அப்பெண்ணை உறுத்

துப் பார்த்தார். "இந்தப் பெண் மிகவும் நேர்த்தியாக இருக்கிருள். இவளை நான் திருமணம் செய்து கொள்கிறேன். இந்த விமானத்தையும் நானே விலைக்கு வாங்கிக் கொள்கிறேன்!" என்ருர் அந்த ஆதிவாசி.

"இப்பெண் ஏற்கெனவே திருமணமானவர். இந்துமதச் சார்புடையவர். அம்மதப்படி, ஒருபெண் மறுமணம் செய்து கொள்வது தவறு!" என்ருர் அதிகாரி.

"வேறு மதமாகயிருந்தால் என்ன? எங்கள் மதத்தில் சேர்த்துக் கொள்கிருேம். எங்கள் சமய மரபுப்பிரகாரம் ஓர் ஆண் எத்தனை பெண்களை வேண்டுமானுலும் மணந்து கொள்ளலாம். எனக்குக் கூட எத்தனையோ மனைவிமார் உள்ளனர். இருந்தாலும் இம்மங்கையின் அழகு என்னை வசீகரப் படுத்திவிட்டது! எவ்வளவு பணம் வேண்டுமானுலும் தருகிறேன். இவளை எனக்குத் திருமணம்செய்து தாருங்கள் ஐயா!" என்று மன்ருடிஞர் அந்த ஆதிவாசி.

அந்த ஆதிவாசியைச் சமாதானப் படுத்தி முடிப்பதற்குள் அதிகாரிகள் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல!

ஆதிவாசியின் கவனத்தை ஈர்த்த அப்பெண்: திருமதி இந்திரா காந்தி அவர்கள்!

# சிறுதுளி பெரு வெள்ளமல்ல

பாளையப்பட்டு ஜமீன் மாளிகையில் அவரது ஒரே மகனின் கலியாணத்தை முன்னிட்டு அமர்க்களப்பட்டது.

உணவு விடுதியில் வேண்டிய பொருள்கள் வேண்டுமளவு சேகரிக்கப் பட்டு விட்டன. பால் சேகரிப்பது மட்டுமே பெரும் பிரச்சினையாக நின்றது.

ஆஸ்தானகவி, பிரச்சினையைத் தீர்க்க யோசனை ஒன்று கூறினர்.

அதன்படி, ஒவ்வொருவர் வீட்டிலிருந்தும் கட்டாயமாக ஒருசெம்பு பால் கொண்டு வந்து, ஜமீன் மாளிகை முகப்பில் உள்ள பால்க் கொப்பரையில் சேர்பிக்க வேண்டும் என்று அந்த வட்டாரத்திலுள்ள குடிமக்கள் எல்லோருக்கும் பறை அறிவிக்கப் பட்டது.

அன்றுமாலை பால் சேமிக்கப் பட்டிருந்த பகுதியைப் பார்வையிட வந்தார் ஜமீன்தார். பால் கொப்பரையில் பால் நிறைந்திருக்கவில்லை. தண்ணீர்தான் நிறைந்திருந்தது !

ஜமீந்தார் கைகளைப் பிசைந்தார். கவி மூளையை உருட்டினர்.

கடைசியில், குடிமக்களை ஒவ்வொருவராக அழைத்து வர ஏற்பாடு செய்தார் கவிஞர்.

''தலைக் கெட்டாத ஓசரமுள்ள இம்மாம் பெரிய பால் சட்டியிலே நான் ஊத்துற இந்த ஒருசெம்பு தண்ணீர் மட்டுந்தானா தெரிஞ்சிடப் போகுதுன்னு நெனைச்சு, சொம்பிலே தண்ணீரை நிறைச்சு, யாருக்கும் தெரியாம ஓடியாந்து கொப்பரையிலே ஊத்திட்டேனுங்க!'' என்றான் ஓர் உண்மை விளம்பி.

ஒவ்வொருவரிடமிருந்தும் இதே பதில் தான் கிடைத்தது!

## டெலிபோனில் திருமணம்

லண்டன், ஒண்டாரியோ விலுள்ள பாகிஸ்தானிய உடற்கூறு ஆசிரியர் ஸ்ரீ ஷீஜாபட் நேற்று டெலிபோனில், பாகிஸ்தான் லாகூரிலுள்ள தமது அத்தைமகள் புரவீண்பட்டை திருமணம் செய்து கொண்டார். 1965 ஆகஸ்ட் 28ல் திருமணம் நடந்தது.

ஷீஜாபட் விடுமுறைக்காக 5 வருஷத்துக்கு முன் ஐரோப்பா சென்றார். ஒண்டேரியோ சர்வகலா சாலையில் விஞ்ஞான பட்டம்பெற்று பிறகு ஆசிரியராக பணியாற்றி வருகிறார்.

மணப் பெண்ணும் கனடா செல்ல திட்டமிட்டுள்ளார்.

இதற்கு ஏதாவது சிக்கல் ஏற்பட்டால் ஸ்ரீபட் அடுத்த ஜூன் மாதம் பாகிஸ்தானுக்கு திரும்பி விடுவார்.

# வருமுன் காத்தல்!

ஓடிக் கொண்டிருந்த புகை வண்டியில் யூத இளைஞன் தாவி, கிழவன் ஒருவன் பக்கத்தில் அமர்ந்து, "இப்பொழுது நேரம் எவ்வளவு?" என்று கேட்டான்.

"ரெயில் கார்டிடம் அறிந்துகொள்."

"கையில் கடிகாரம் கட்டிக் கொண்டு மணி சொல்லத் தயங்குகிறீர்களே? வெள்ளையர்கள் நிரம் பியிருக்கும் இவ்விடத்தில் ஒரு சகயூதனிடம் இவ் விதம் இங்கிதமில்லாமலா பேசுவது? அல்லது உமது கடிகாரம் 'ஸ்ட்ரைக்' செய்து விட்டதோ?"

"நான் உன்னிடம் சரளமாகப் பேசினால், இதிலி ருந்து நம்மிடையே சம்பாஷணை தொடங்கும். பின்பு நான் எவ்விடம் வசிக்கிறேன் என்று நீ வினவி, 'நான் ஒருபோதும் அவ்விடம் வரவில்லையே?' என்று முடிப்பாய். அதற்கு நான் உன்னை என் இல்லம் வரும்படி அழைப்பேன். அங்கு எனது அழகிய மக ளைச் சந்தித்துக் காதலாகித் திருமணத்துக்கு ஒப்பும் படி என்னிடம் இறைஞ்சுவாய். நான் உன்னிடம் எவ்வளவோ சகஜமாகவும் அன்பாகவும் பழகி விட்டு, கடைசியில் திருமணத்துக்கு ஒப்புதல் கேட் கும் பொழுது, 'கேவலம் ஒரு சொந்தக் கைக் கடிகா ரம் வைத்திருக்காதவனுக்கா என் மகளை முடித்துக் கொடுப்பேன்?' என்று சொல்வதைக் காட்டிலும்,

இப்போதே மணி சொல்லாமலிருந்தால், இவை யாவற்றையும் தடுக்கலாம் என்றுதான் நான் மணியைச் சொல்லவில்லை...!'' என்முன் கிழவன்.

## 1961ல் கதர்த் தொழில்

கதர்த் தொழிலால் நம் நாட்டில் முன்னேற்றம் கண்டுள்ள கிராமங்கள் சுமார் லட்சமாகும். மொத்தத்தில் சுமார் 15 லட்சமக்கள் நாடு முற்றிலுமாகக் கதர்த் தொழிலினல் நன்மை பெற்றிருக்கிறார்கள். அவர்களில் மூன்றிலொரு பங்கு, அதாவது 5 லட்சம் பேர் சென்னை மாநிலத்திலுள்ளவர்கள். 1959-60ல் 2, 47, 270 கிஸான் ராட்டை நூற்பவர்கட்கு ரூ 43, 44, 038 ஊதியம் தரப்பட்டது. 64, 886 ராட்டைகள் விநியோகிக்கப் பட்டன. 19, 836 அம்பர் ராட்டைகள் பயிற்சி பெற்றோர்க்கு வழங்கப் பட்டன. 1659-60ல் தமிழ்நாடு சர்வோதய சங்கத்தின் ஆதரவில் வேலை வாய்ப்புப்பெற்ற நூற்பவர் எண்ணிக்கை: 1 22, 500. நெசவாளர்கள்: 3, 286. வழங்கப் பெற்ற ஊதியம் :ரூ 72, 57, 225. கதா உற்பத்தி 43, 23, 503 கஜம், பெறுமதி ரூ 94, 85, 164.

## ஜட்கா விலை!

சென்ற மகா யுத்தத்தின் போது: அமெரிக்கச் சிப்பாய் ஒருவன் சென்னையில் ஜட்கா வண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு பிரயா

ணம் செய்தான். போக வேண்டிய இடத்தை அடைந்ததும், வண்டிச் சத்தம் என்னவென்று கேட்டான், சிப்பாய்.

வண்டிக்காரன் ஆறுஅணு என்பதற்காக ஆறு விரல்களைக் காட்டினுன்.

அமெரிக்கச் சிப்பாய் ஆறுரூபாய் நோட்டுக்களை எடுத்துக் கொடுத்தான், வண்டிக்காரனிடம்.

அமெரிக்கன் வண்டியையும் குதிரையையும் கிரயம் செய்து விட்டதாக எண்ணிய வண்டிக்காரன், வண்டியையும் குதிரையையும் விட்டு விட்டு, வீடு நோக்கி நடக்கத் தொடங்கினுன் !

## பாம்பு நல்லதோ !

---

கோழிக் கோட்டில் நடந்தது இந்த உண்மைச் சம்பவம்.

நாலடி நீளமுள்ள நல்லபாம்பு அந்த நாயரைக் கடித்து விட்டது.

ஆனுல் அவரோ அப் பாம்பைப் பதிலுக்குக் கடித்தார். ஆத்திரம் தீருமட்டும கடித்தார். பாம்புப் படத்தின் பகுதியிலெல்லாம் அழுத்தமாகக் கடித்தார்.

பிறகு, கடிபட்ட பாம்பைத் தூக்கிக் கொண்டு, வைத்தியர் வீட்டுக்கு ஓடினார் நாயர் — சுகுமாரன் நாயர்!

அவர் பிழைத்து விட்டார்.

ஆனால், பாவம், அந்த நல்லபாம்பு மடிந்து விட்டது!...

பாம்பைப் பதிலுக்குக் கடித்த அந்த அதிசய மனிதர் பைத்தியமா?

அல்ல!

அவர் அப்போது - பாம்பைக் கடித்தபோது - நல்ல குடிபோதையின் உச்சத்தில் இருந்தாராம்!...

## அதிசயங்களைச் சந்தியுங்கள்!

---

தமிழ்த் தாத்தா என்று போற்றப்படும் மகா மகோபாத்தியாய உ. வே. சுவாமிநாதய்யரும் அண்ணல் காந்தியடிகளும் ஒரே மேடையில் பேசினார்கள். மறக்கமுடியாத இந்த அதிசயம் 1934 ஆம் ஆண்டில் நடந்தது. அப்போது தமிழ்த் தாத்தாவிடம், "நான் உங்களது மாணவனாக இருந்து தமிழ் கற்கப் பாக்கியம் செய்ய வில்லையே!" என்று மகாத்மா குறைபட்டுக் கொண்டார். ஒரு விசேடம் என்ன தெரியுமா? — காந்திஜிக்கு, அப்போது தமிழ் தெரிந்திருந்தது!

# 150 விருதுகள் பெற்றவர்கள்

"இறுதி வெற்றி நமக்கே!" என்று பறை சாற்றி, 'V' எனும் ஆங்கில எழுத்தை நமது இருவிரல்களால் காட்டி, இறுதியில் இரண்டாம் உலகப் போரில் வெற்றி பெற்ற சரித்திர வீரர் சர் வின்ஸ்டன் சர்ச்சில்.

முப்பதுக்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியர் இவர், நூற்றைம்பதுக்கும் மேலான விருதுகள் பெற்றவர். நோபல் பரிசும் கிடைத்தது. அமெரிக்கா இவரை தமது தேசத்தின் கௌரவ பிரஜையாக 1963ல் தேர்ந்தெடுத்தது. வெளி நாட்டவர் ஒருவரை அமெரிக்கா கௌரவப் பிரஜையாக ஏற்றது. அதுவே முதல் தடவையாகும்!

## "பக்கிரி"

காந்திஜிக்கு அரை நிர்வாணப் பக்கிரி என்று பட்டப் பெயர் சூட்டினவர் ஸர் வின்ஸ்டன் சர்ச்சில். ஆனால் காந்திஜி இவ்வாறு அரை நிர்வாணப் பக்கிரியாக விளங்க ஏதுவாக இருந்தது; மதுரை மக்கள் உடுக்க போதுமான உடை இல்லாமல் அவதிப்பட்ட காட்சிகளைக் கண்டார்; தாமும் ஒரே ஆடையையே உடுத்துவது என்ற விரதத்தை மேற்கொண்டார்!

# அதிசயங்கள்!

உலகத்தில் உள்ள சரித்திரப் புகழ் பெற்ற அதிசயங்கள் எத்தனை, தெரியுமா?

ஏழு!

ஆனால், இப்பொழுது அந்த அதிசயங்களின் எண்ணிக்கையை அவரவர்கள் கூட்டியும் குறைத்தும் சொல்லி வருகிறார்கள்.

அந்தப் பிரச்சினை எப்படியாவது திண்டாடட்டும்.

ஆனால், அசலான ஏழு அதிசயங்களை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும் அல்லவா?

இதோ, அந்தப் பட்டியல்:

1. எகிப்து நாட்டின் பிரமிட்கள்
2. பாபிலோனிலுள்ள தொங்கும் தோட்டம்
3. மாசுலாஸ் சமாதி
4. தாஜ்மஹால்
5. ரோட்ஸில் சிலை
6. பைசா நாட்டுச் சாய்ந்த கோபுரங்கள்
7. ஒலிம்பியாவின் ஜூபிடர் சிலை

# மொழி சென்ஸஸ்!

உலகில் 30 மொழிகளில் இதுவரை திருக்குறள் இடம் பெற்றிருக்கிறது.

பர்மிய மொழியில் திருக்குறளை மொழி பெயர்த்தவர்: ஊஜியோத்தாண்ட்.

# பைபிள்!

வர்த்தகர் ஒருவர் தமது தொழில் சம்பந்தமாக அடிக்கடி வெளியூரில் பிரசங்கங்கள் செய்ய வேண்டியிருந்தது. அவர் பல விகடத் துணுக்குகளைச் சொல்வார், ஆனால் சபையோர் ரசிப்பதில்லை. இது அவருக்குப் பெரிய மனக் குறையாக இருந்தது.

ஒரு நாள்

பைபிளிலிருந்து ஒரு மேற்கோள் கூற விரும்பினார். ஆனால், பாவம் ஞாபகத்திற்கு வரவில்லை. சட்டைப் பையைத் துழாவினார்.

பிரசங்கியின் இந்த அவஸ்தையைக் கண்டு, சபையோர் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

இந்தத் துரதிர்ஷ்டத்திலிருந்து வர்த்தகர் ஓர் உண்மையான ரகசியத்தை அறிந்து கொண்டார். அதாவது, மக்களை தம் வாக்கைக் கேட்டுச் சிரித்

செய்வதைவிட, தம்மைக் கண்டே சிரிக்கச் செய்வது சுலபம் என்று அறிந்தார். அது முதற்கொண்டு, தமது மேற்கோளை மறந்து சட்டைப் பையில் துழாவு வது போல எப்போதும் நடிக்கத் தொடங்கினர். மேலும் ஒரு சமயம், மேற்கோளை வேண்டுமென்றே பிழைபடச் சொல்லுவார். இவற்றையெல்லாம் சபை யோர் ஓயாமல் சிரித்தார்கள்.

இவ்வாறு, அவ்வியாபாரி தமது சொந்தக் கவுர வத்தைச் சற்றே விட்டுக் கொடுத்ததின் மூலம், மக்களின் அன்பைக் கவர்ந்த பிரசங்கியானர்! அவரது ஏல வியாபாரமும் உலகப் பிரசித்தமானது!

அந்த வர்த்தகர் யார்?

ஸர் ஜோன் மில்டன்!

## சித்திர விசித்திரம்!

டில்லி முழுவதும் அந்த மேல் நாட்டுச் சைத்ரீ கனைப் பற்றித்தான் பேச்சாக இருந்தது. கிழவி ரோஷனுவுக்குத் தன் படம் ஒன்றை அவனிடம் எழுதி வாங்க வேண்டுமென்று ஆசை பிறந்தது; வெற்றி கிடைத்தது!

படத்தை மேலும் கீழும் திருப்பித் திருப்பிப் ர்த்தாள்; ஒளியிழந்த அவளுடைய கண்களுக்குப் ம் ஒன்றும் தெளிவாகவே தெரியவில்லை. அந்த

மாதக் கடைசியில் கராச்சியிலிருந்த அவள் மகளைப் பார்க்கப் புறப்பட்டாள்.

பாக்கிஸ்தான் எல்லைப்புறத்திலிருந்த சுங்கச் சாவடியில், கிழவி ரோஷனு கொண்டு போயிருந்த அந்த 'கான்வாஸ்' துணிப் படத்தை அப்படியும் இப்படியும் புரட்டிப் பார்த்தார் இன்ஸ்பெக்டர். நீண்ட கோடுகளும் குறுக்குக் கோடுகளும் வளைவு கோடுகளும் தெரிந்தனவேயொழிய, எந்த உருவமும் சரியாகத் தெரியவில்லை.

"யார் சொன்னது? இது படமேயில்லை. ஏதோ ஓர் இடத்தின் பிளான் இது!" என்று அதிகாரிகள் எல்லோரும் ஏகோபித்து முடிவு கட்டினார்கள்.

கிழவி கதறினாள்: "ஐயா, வயசு காலத்திலே என்னுடைய படம் ஒன்று வீட்டுக்கு இருக்கட்டுமே என்று ஆசையோடு எழுதித் தரச் சொன்னேன். அந்தப் பாவி ஏமாற்றி விட்டான் போலிருக்கிறது!... இந்தப் படத்தின் ரகசியம் எதுவுமே எனக்குத் தெரியாது! என்னை விட்டு விடுங்கள்!..."

## விபரீத விளம்பரம்!

அடிக்கடி ஆகாயத்தில் பறக்கும் ஆகாய விமானங்களின் சத்தத்தினால் ஒரு சினிமா ஸ்டூடியோ பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தது. ஒரு நாள் ஸ்டூடியோவின் மேல் மாடியில் ஒரு விளம்பரப்

பலகை தொங்க விடப்பட்டது. அதில், "சினிமா ஸ்டூடியோ-சத்தம் போடாதே!" என்று இருந்தது.

மறுதினம் எதிர்பார்த்ததைவிடச் சத்தம் அதிகமாகக் கேட்டது. காரணம் என்ன என்கிறீர்களா? ஆகாய விமானிகள், விளம்பரப் பலகையில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக, ஸ்டூடியோவின் தலை மீதே பறக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது?

## ஞாபக மறதி வாழ்க!

நியூயார்க்கிலே ஏராளமான பொருட்செலவில் ஒரு தபால் நிலையம் நிறுவப்பட்டது. திறப்பு விழா முடிந்ததும், ஆயிரக்கணக்கான புகார் மனுக்கள் தபால் மேலதிகாரிக்குப் பறந்தன: "இவ்வளவு பெரிய கட்டடத்தில் கடிதங்கள் போடுவதற்குத் தபால் பெட்டி இல்லை!"

கட்டடம் கட்டியவர் சொன்ன பதில் இதோ: "...ஏன் பதறுகிறீர்கள்? ஜனங்களிடமிருந்து வரும் கடிதங்களை நீங்களே வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். தபால் பெட்டியைக் கட்டி முடித்து விடுகிறேன். மனிதன் என்றால் ஞாபகமறதி சகஜந்தானே, ஸார்?"



வருமானம். அக்கா, தங்கச்சி கூலிக்குப் போறதால கொஞ்சம் வருமானம் வருது. காலத்தை எப்படியோ ஓட்டறோம்...

இரண்டு மாசத்துக்கு ஒரு தடவை ஒரு ஆட்டை வித்துடுவேன். பத்து கிலோ ஆடுன்னா சொளையா ஆயிரத்தி ஐநூறு ரூபாய் கிடைக்கும்.

ஒவ்வொரு தடைவை விற்கும் போதும் மனசு கிடந்து அடிச்சிக்கும். என்னையே விற்கிற மாதிரியாயிருக்கும். விற்ற மறுநாள் எனக்கு சாப்பாடே இறங்காது. அப்புறம் சகஜமாயிடும்.

குட்டியிலேர்ந்து எப்படியெல்லாம் வேப்பந்தழை, புளியந்தழை, வேலந்தழை, கொடுக்காப்புளித்தழை மரமேறி வெட்டி, நிழல்ல ஒதுக்கி சின்னச் சின்னதா நறிச்சிப் போட்டு வளர்த்திருப்பேன்.

மலையிலே காரைச்செடி, பூண்டுச் செடி, கொவ்வைத் தழைன்னு மேயறப்போ விஷஜீவராசிங்க கிட்டே யிருந்து காப்பாத்தியிருப்பேன். 'என்' றெல்லாம் தனக்குத்தானே சொல்லிக் கொண்டு வருந்துவான் தோமினிக்.

இப்போது தோமினிக்கிடம் இருப்ப வற்றில் பதினாறு சினை ஆடுகள்.

ஒரு வைப்புக்கு அதாவது ஆறு மாதத்துக்கு ஒருமுறை ஓர் ஆடு, இரண்டு அல்லது மூன்று குட்டிகள் போடுகின்றன.

வனப் பகுதியில் மேய்க்கும் போது அவன் மிகவும் எச்சரிக்கை யாயிருப்பான். காட்டு இலாகா அதிகாரிகளின் பார்வை யில் சிக்கவே மாட்டான்.

அதனால் அபராதம் என்று ஐந்து காசுகள் கூட அவன் இதுவரை கட்டிய தில்லை.

வன சஞ்சாரத்தின்போது-

தோமினிக் தானாக எதையாவது சொல் வான். அது பாடலாகத்தானிருக் கும்.

எழுதப் படிக்கத் தெரியாத அவனால் எப்படித் தானாக பொருள் பொதிந்த



# 'வந்தேமாதரம்!'

**1942**இல் சிறையில் மகாத்மாஜி உடல் நலமிழந்து இருந்தார். அவரது உடல்நலம் சீர்பெற இந்தியா பூராவிலுமே பிரார்த்தனைக் கூட்டங்கள் நடந்தன. சென்னையில் அம்மு சுவாமிநாதனும் மஞ்சுபாஷிணி முதலானோர் மட்டுமே வெளியே மிஞ்சி நின்றனர். அவர்கள் பிரார்த்தனைக் கூட்டத்தை நடத்த முன் வந்தனர். அவர்களையும் கடைசி நேரத்தில் வெள்ளையாட்சி கைது செய்தது. அப்போது டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி இருதய நோயால் அவதிப்பட்டார். விவரம் அறிந்து, ஓடிவந்து, கூட்டத்தை நடத்தினார். 'கூட்டம் நடத்தினால் கைது செய்வோம்!' என்று பய முறுத்திய அதிகாரியை எள்ளி நகையாடினார்: "காந்திஜியின் உயிரைக் காப்பதற்காக இங்கே தடைமீற வந்திருக்கும் நாங்கள் கைதாவதற்கு மட்டுமல்ல; தூக்கு மேடை ஏறவும் தயார்!" என்று வீறு கொண்டு பேசினார்.

"வந்தே மாதரம்!... மகாத்மா காந்திக்கு ஜே!" என்ற கோஷங்களுடன் கூட்டம் 'ஜாம் ஜாம்' என்று நடந்து முடிந்தது.

மறுநாள், காந்திஜி விடுதலை செய்யப் பட்டார்!

***தகவல் : பூவை மணிகண்டன்***

---

சின்னச் சின்னப் பாடல்களைச் சொல்ல முடிகிறது? சுற்றுப் பக்கத்து ஊர்கள் கூட எப்படி அவனால் பாட்டுக் கட்டிப் பாட முடிகிறதென்று இன்றும் மலைத்து நிற்கிறார்கள்.

புலவர் மரியராசு மட்டும் அவனைப் பார்க்கும்போதெல்லாம் சீண்டிக் கொண்டேயிருப்பார், பாடச் சொல்லி.

"ஹே... கட்டுபடி காளிதாசு. நீ அவ்வப்போது பாடறதைக் கேட்டிருக் கிறேன். உனக்கே தெரியாமல் கேட் டிருக்கிறேன். என் வீட்டுப் பின்னால் மலையடிவாரத்தில் நீ பாடிய உன் பாடல்களில் ஒன்றிரண்டு எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. சொல்லட்டுமா?"

"மண்ணில் மறைந்துள்ளான்
விண்ணில் ஒளிந்துள்ளான்
கல்லில் கலந்துள்ளான்
சொல்லில் சிறந்துள்ளான்
உன்னில் உறைந்துள்ளான்
என்னில் நிறைந்துள்ளான்
மண்ணும் விண்ணும் கல்லும்
சொல்லும் அவனைத் தேடுகிறது"

-இதையெல்லாம் நீ எப்படி பாடறே?

எழுத்து என்றால் என்னவென்றே தெரியாத உன்னால் எப்படி இவ்வளவு ஆழமாய்ச் சொல்ல முடிகிறது?"

"வாத்தியாரே! கார்ப்பரேசன் பேங்க் மேனேஜர்கிட்டே சொல்லி சின்னதா ஆட்டுப் பண்ணை ஒண்ணு தொடங்கணும்ன்ற என் எண்ணத்தை நிறைவேத்துங்களேன்" என்று தன்னை வெளிப்படுத்தி, பேச்சை மாற்றுகிறான் தோமினிக்.

"காளிதாசு, மேலாளர் திரு. கே. ராஜு எனக்கு வேண்டியர். நானே அவரிடம் சொல்லி உனக்கு ஏற்பாடு செய்கிறேன்."

"அது போதும் வாத்தியாரே! பேங்க் தர்றதாலே தொடங்குகிற சின்ன வெள்ளாட்டுப் பண்ணையா உழைச்சே மாத்திடுவேன் நான்" என்றான் தோமினிக், துரட்டுக் கோலைத் தலைக்கு மேல் தூக்கி!

***படங்கள் : மணி ஸ்டூடியோ கணியம்பாடி***

குட்டக்கருப்பன் சொன்னதைக் கேட்டவர்கள், அவனை ஏதோ சொர்க்கலோகத்தைப் பார்த்து வந்தவனைப் போல அதிசயமாய்ப் பார்க்கத் தொடங்கி விட்டார்கள்.

பெரிய முதலாளி தப்பித் தவறி, 'வீட்டிற்குள் வேலை இருக்கிறது' என சொல்லிவிட்டால் போதும்!' நான் போகிறேன்... இல்லை, நான்தான் போவேன்' என ஆண்களுக்கும், பெண்களுக்குமாய்ப் போட்டியே நடந்துவிடும்.

வேலைக்காரச் சனங்களோடு பெரிய முதலாளி மட்டுமே நெருங்கிப் பழகுவதால், அடிக்கடி பார்த்துக் கொள்ள முடியுமே தவிர, மற்றபடி முதலாளி அம்மாவையும், சின்ன முதலாளியையும் இவர்கள் அதிகம் பார்த்தது கிடையாது.


சின்ன முதலாளி டவுனில் படிப்பதால், எப்பவோ ஒருமுறைதான் இங்கு வருவார். வந்தாலும் கையில் கேமராவோடு வயல் வரப்பு, தோப்புகளில் திரிவதோடு சரி, யாருடனும் பேசமாட்டார். வேலையாட்களே, வலிய ஏதாவது பேசினாலும் திரும்பி ஒரு பார்வை பார்ப்பதோடு சரி. அந்தப் பார்வையில் ஒரு எள்ளல், கர்வம் இருக்கும்.

அதிசயமாய்த் தொகுதிப் பக்கம் வரும் எம்.எல்.ஏவைப்போல், சம்பளம் கொடுக்கும் நாள்களில் பங்களாவின் மேல்மாடியில் முதலாளி அம்மா வந்து நின்று வேடிக்கை பார்ப்பார்கள். அந்தச் சமயம், சம்பளம் வாங்குவதைவிட்டு, வாயைப் பிளந்தவாறு அவர்களையே வேடிக்கைப் பார்ப்பார்கள் இவர்கள்.

அன்று டவுனில் படிப்பை முடித்து விட்டு வரும் சின்ன முதலாளியை வரவேற்க எல்லாருக்குமே சம்பளத்துடன் லீவு கொடுத்தார், பெரியவர்.

திருவிழாக் கோலம்போல், வரவேற்பதற்காக வான வேடிக்கைகளோடும், கொட்டு மேளங்களோடும், தங்களின் உறவுக்காரர் வரப் போவதைப் போல் தயாராகி விட்டார்கள், பண்ணையாட்கள்.

சின்ன முதலாளியை எதிர் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு, வந்த அந்தச் செய்தி அதிர்ச்சியைத் தந்தது.



"மொத்த ட்ரிப்ஸ்சும் இறங்கி முடிவதற்குள், நாம் மாட்னி, ஈவினிங், நைட்ஷோ பார்த்துட்டு வந்திடலாம் வாடி!"
– சுதர்ஸன்

'ஊரை நோக்கிப் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருக்கும் பொழுது, மண் லாரியோடு பஸ் மோதியதில் நாற்பது பேர் அந்த இடத்திலேயே இறந்து விட்டார்கள் என்றும், பலர் மூச்சுப் பேச்சில்லாமல், அபாயகரமான நிலைமையில் ஆஸ்பத்திரியில் இருப்பதாகவும் அதில் ஒருவர் சின்ன முதலாளி' என்றும் சொன்னார்கள்.

வரவேற்பு களை கட்டியிருந்த வீடு நொடியில், பண்ணையாட்களின்

வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுத அழுகையின் ஒலியால் மரண வீட்டைப் போல மாறி விட்டது.

பெரிய முதலாளி நிலைகுலைந்தவராக உடனே காரை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டார். போனவர் நிறைய நாள்கள் கழித்துத்தான் வீட்டுக்கே வந்தார். அதுகூடப் பணம் எடுப்பதற்கு வந்ததாகச் சொன்னார்.

தங்கள் வயிற்றுப் பிள்ளைக்கு வந்த விபத்தாக, "எப்படி இருக்குங்க மொதலாளி?" கவலையில் குரல் கம்மிப் போய் விசாரித்தார்கள்.

"இன்னும் ஏதும் முடிவு சொல்ல முடியவில்லை... அவனுக்கு சுய நினைவு வரவில்லை..." என்றார்.

'சின்ன முதலாளிக்கு சுயநினைவு வரவில்லை!' என்பதைக் கேள்விப் பட்டவர்கள், தங்களைப் பற்றிய நினைவுகளையெல்லாம் விட்டு விட்டு, சின்ன முதலாளியைப் பற்றிய நினைவுகளையே சுமக்கலானார்கள்.

ஒவ்வொருவரும் தங்களின் குல தெய்வங்களுக்கு விஷேச வழிபாடுகள் நடத்தினார்கள்.

மருத்துவமனையிலிருந்து பெரிய முதலாளி வரும்பொழுதெல்லாம், ஒரு புதிய செய்தியைச் சொல்வார். ஒருநாள், 'இரத்தம் நிறையத் தேவைப் படுது... அவன் இரத்தம் எங்கேயும் கிடைக்கல' என்றார்.

இன்னொரு நாள் வந்து, "அவனுடைய ரெண்டு கண்ணையுமே மாத்தணுமாம். வேற கண்ணுதான் வைக்கணுமாம்..." என்றார்.

பண்ணையாட்கள் பதறியடித்துக் கொண்டு கேட்டார்கள்; விசாரித்தார்கள்; தங்களால் எந்த வழியில் உதவ முடியும் எனக் கேட்டு உதவினார்கள்.

எல்லாம் முடிந்தது. 'அபாயக் கட்டத்தைத் தாண்டிவிட்டான். இனி எந்தக் கவலையும் இல்லை' என ஒருநாள் வந்து சொன்னார்.

'ஒரு கண்டத்திலிருந்து தப்பித்து மறுவாழ்வு கண்ட சின்ன முதலாளி விரைவில் வரப்போகிறார்' என்ற

## பிரதமர் நேருஜி !



அந்நாளிலே –

பிரதமர் நேருஜி டில்லியிலுள்ள அரசாங்கக் காரியாலயத்துக்குச் சென்றார். லிஃப்டின் வழியே மேலே சென்றபோது, திடீரென லிஃப்டில் கோளாறு ஏற்பட்டு நின்று விட்டது.

நேருஜி லிஃப்டினுள் குறுக்கும் நெடுக்குமாய் உலாவினார். ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பது, அவருக்கு வேதனையளித்தது.

உடனே அவர் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. 'லிஃப்டின் மூலையில் சில நூல்களை வைத்தால் நன்றாக இருக்கும். இந்த மாதிரி நேரங்களில் அவற்றை எடுத்துப் படித்துப் பயன் பெறலாமே!' என்று எண்ணினார்.

லிஃப்டின் கோளாறு நீங்கி இயங்கியது.

தம் அறைக்கு வந்தவுடன், லிஃப்டின் ஒரு மூலையில் நல்ல புத்தகங்கள் சிலவற்றை வைக்க ஏற்பாடு செய்தார் நேருபிரான்!

தகவல் : பூவை சக்திபாலன்

எண்ணமே பண்ணையாட்களுக்கு இனித்தது.

ஒரு வழியாக, 'இன்றைக்கு சின்ன முதலாளி வருகிறார்' என உறுதிப் பட்டு வழக்கம்போல் வரவேற்பு ஏற் பாடுகள் நடந்து கொண்டிருந்தது.

கால் கடுக்கக் கைக்குழந்தை யோடு பெண்களும், கம்பு ஊன்றும் வயதான பெரியவர்களும் கூட மணிக் கணக்காகக் காத்துக் கிடந்துக் களைத்துப் போயிருந்தார்கள்.

தூரத்தில் டாக்ஸி வருவது தெரிந்து, களைப்பெல்லாம் பறந்து, உற்சாகமானார்கள். ஆனந்தம் பொங்க பங்களா வாசலின் இருபுறமும் எழுந்து நின்றார்கள்.

சின்ன முதலாளி இருந்த கார், மெயின் கேட் வழியாக, புல்வெளி யில் தவழ்ந்து, பங்களா வாசலருகே நின்றது. இறங்கிய சின்ன முதலாளி, காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு முகத்தைக் கூடக் காட்டாமல், வீட்டி னுள் நுழைந்து மாடிப்படியில் ஏறினார்.

அவரின் முகத்தை எப்படியும் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலில், முதல் முறையாக அய்ய னார், பங்களாவினுள் நுழைந்து விட்டான்.

வெளியே நின்று, இதைப் பார்த்த பண்ணையாட்கள் ஆச்சரியமும், அதிர்ச்சியும் ஒருசேரத் தாக்கக் கையைப் பிசைந்து கொண்டு நின்றார்கள்.

சின்ன முதலாளி கோபத்தோடு அய்யனாரின் பக்கம் திரும்பினார்.

"ஏய்... உன்னோட சாதி என்ன? என்னோட சாதி என்ன? வெளியே போ..! என்னைப் பார்க்கணும்னா, நான் போய் மாடியில நிற்கிறேன். நீங்களெல்லாம் கீழேயிருந்து பாருங்க." என்றார்.

பெரிய முதலாளி ஏதோ சொல்ல முயலும் முன் பூவாத்தாள், கூட் டத்தை விலக்கிக் கொண்டு முன்னே வந்தாள்.

"சின்ன முதலாளி கொஞ்சம் நில்லுங்க...!" சத்தமாய்ப் பூவாத்தாள், குரலில் பிசிறு இல்லாமல் பேச்சைத் தொடங்க, என்னவென்று புரியாமல் திரும்பிப் பார்த்தார் சின்ன முதலாளி.


என்ன கேட்டிங்க... நீ என்ன சாதின்னா? சொல்றோம் மொத லாளி! நாங்க உழைக்கிற சாதி! பழக ஆரம்பிச்சா நாய்மாதிரிப் பாசம் வைக்கிற சாதி! நீங்க இப்ப உயிரோட வந்திட்டீங்க! ஆனா, எப்படி வந்திங்கன்னு தெரியுமா? அன்னைக்கு உங்களுக்கு நிறைய இரத்தம் தேவைப்பட்டுச்சு. அப்ப உங்களுக்கு இரத்தம் கொடுத்தது இந்த அய்யனார்தான்... இவனோட இரத்தமும் உங்க உடம்புல ஓடுது... அப்ப, இப்ப நீங்க என்ன சாதி மொதலாளி? எங்களையெல்லாம் ஒரு பூச்சி, புழுவைப் பார்க்கற மாதிரி பார்க்கிறீங்களே... அந்தக் கண்ணு கூட, உங்க தோட்டத்துல கிணறு வெட்டும்போது, வெடி வெடிச்சதுல செத்த எம்புருசனோட கண்ணு தான்... உங்க எண்ணப்படி கேவலம் ஒரு கூலிக்காரப் பய கண்ணு...! இப்ப நீங்க எந்தச் சாதி மொதலாளி?

"மனுசங்களோட இரத்தமும், உறுப்பும் மனுசனுக்கு மனுசன் பொருந்தும்போது ஏங்க மொதலாளி மனசும், மனசும் ஒட்டமாட் டேங்குது...?"

மூச்சு விடாமல் பேசிய பூவாத் தாள், பங்களாவை விட்டு வெளியில் வர, சின்ன முதலாளி, மாடிக்குப் போக ஏறிய படியை விட்டுக் கொஞ்சங் கொஞ்சமாகக் கீழே இறங்கி வந்து கொண்டிருந்தார்.

* * *

## காலம் சுழல்கிறது! உலகம்



### சத்தியமூர்த்தி

ஒரு சமயம், நேருஜிக்கு சததிய மூர்ததி காப்பி கலந்து கொடுக்கும் போது, பால் கொட்டிக் கீழே ஓடியது. இதைப் பார்த்த நேருஜி -

"என்ன சத்தியமூர்த்தி, உங்கள் ஊரில் பாலாறு ஓட்த் தொடங்கி விட்டதே?" என்று சிரிக்காமல் கூறினார்.

ஆனால், தீரர் சத்தியமூர்த்தி சிரித்துவிட்டார்!

### அண்ணல் காந்தி அடிகள்

பிரிட்டிஷ் ராணி எலிசபெத் திருமணம் செய்து கொண்டபோது, அவருக்குத் திருமணப் பரிசாக காந்திஜி தாமே நெய்த மேஜை விரிப்பு ஒன்றை வழங்கினார்.

— பூவை இளையபிரான் —



### ரோஜா!

முட்கள் இருந்தாலும்
இதன் முகம் மட்டும்
சந்தோஷமாய்
மனிதா!
உன் முகம் மட்டும்
மலர்ச்சியாய் இருந்தும்
மனம் மட்டும் ஏன்
முட்களாய்
தைக்கிறது?

சி. முருகன்.

ஆகவே மன்னரும் ராணியும் குமாரரின் கல்யாண வைபவங்களை யெல்லாம் டெலிவிஷன்மூலம் தான் கண்டு களித்தார்கள் !

நம் நாட்டிலோ புதல்வர்களின் கல்யாணம் என்றால்; கல்யாணத்திற்கு பெண் பார்ப்பதிலிருந்து அனைத்துமே பெற்றோர்கள்தான். அது மட்டுமல்ல; மணப்பெண்ணை மணமகன் பார்க்காமல் பெற்றோர்கள் மட்டுமே பார்த்து நிச்சயித்து விடுகிற கொடுமையும் உண்டு.

—o—

# ஆசிரியரின் எமது நூல்கள்

| | | |
|---|---|---|
| பத்தினித் தெய்வம் | — | நாவல் |
| கஞ்சிக் கலயம் | — | நாடகம் |
| தங்கப் பதக்கம் | — | இளைஞர் நாவல் |
| அதிசயக் கதைகள் | — | இளைஞர் கதைகள் |